தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

## 14.08.2013

### தலைநகரில் வெங்காயம் கிலோ ரூ. 80!

தில்லியில் வெங்காயத்தின் விலை கிலோ ரூ. 80-ஆக உயர்ந்துள்ளது.

பலத்த மழை காரணமாக வெங்காயப் பயிர்கள் சேதமடைந்துள்ளன என்றும் வரத்து குறைந்ததுள்ளதால் விலை உயர்ந்துள்ளதாகவும் காய்கறி வியாபாரிகள் கூறுகின்றனர்.

தில்லியில் கடந்த ஒரு வாரத்தில் வெங்காய விலை 32 சதவீதம் உயர்ந்துள்ளது. இந்த மாதம் தொடங்கியதில் இருந்து வெங்காயத்தின் மொத்த விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

இது குறித்து, மத்திய வேளாண் துறை இணை அமைச்சர் தாரிக் அன்வர் கூறுகையில், "வெங்காய விலை உயர்வு கவலை அளிக்கும் பிரச்னைதான். இச்சந்தர்ப்பத்தை இடைத்தரகர்கள் பயன்படுத்தாமல் இருக்கும் வகையில், மாநில அரசுகள் கடும் நடடிக்கை எடுக்க வேண்டும்.

எனினும், ராஜஸ்தான் போன்ற பல மாநிலங்களில் இருந்து வெங்காயம் கொண்டு வரப்படுவதால், பற்றாக்குறை இருப்பதாகத் தெரியவில்லை' என்றார்.

பாஜக செய்தித் தொடர்பாளர் பிரகாஷ் ஜவடேகர் கூறுகையில், "நாளுக்கு நாள் வெங்காயத்தின் விலை உயர்ந்து வருகிறது. இந்த விஷயத்தில் அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. உரிய விளக்கத்தையும் தரவில்லை' என்றார்.

"வெங்காய விலை உயர்வு ஏழை மக்களை நிச்சயம் பாதிக்கும்' என்று காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜகதாம்பிகா பால் சுட்டிக்காட்டினார்.

பாஜக தலைவர் வினய் கத்தியார் கூறுகையில், "நாட்டின் பல பகுதிகளில் வெங்காய விலை உயர்ந்துள்ளது. இதற்கு மத்திய அரசுதான் பொறுப்பேற்க வேண்டும்.

போதிய அளவு வெங்காயம் இருந்தால் ஏன் விலை உயர்கிறது? மத்திய அரசு பின்பற்றிவரும் கொள்கைகள் சரியல்ல' என்றார்.

செப்டம்பரில் விலை குறையும்: இரண்டு மாதங்களாக உயர்ந்துவரும் வெங்காயத்தின் விலை, அடுத்த மாத இறுதிக்குள் குறைய வாய்ப்பு உள்ளது என்று வேளாண் வல்லுநர்கள் கூறுகின்றனர்.

வெங்காய விலை நிலவரத்தை அரசு கண்காணித்து வருவதாகவும், வெங்காயத்தை பதுக்கினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தில்லி பொதுப்பணித் துறை அமைச்சர் ராஜ்குமார் கூறியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**உழவர் பாதுகாப்பு திட்டத்தில் நிதி உதவி**

நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் பயன்பெறலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடலூர் மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் வெளியிட்ட செய்திக்குறிப்பு: முதல்வர் உழவர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக உள்ள விவசாயிகள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு ஏற்படும் உடல் உறுப்புகள் பாதிப்பு, தண்டுவட பாதிப்பு, கண்பார்வை, நரம்பு மண்டலம், எலும்பு, தசை நார், இதய நோய், மனநலன், கை, கால் எலும்பு முறிவு, மூட்டு நழுவுதல், ஜவ்வு மற்றும் நார் சேதம், தசை நாண் காயம் ஆகிய நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு அரசு உதவி மருத்துவரின் மருத்துவச் சான்றிதழ் பேரில் மாதம் ரூ.1,000 உதவித் தொகையாக வழங்கப்படும்.

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உறுப்பினர்களாக உள்ள நபர்கள் எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்டு இறந்திருப்பின் அவர்களின் ஆதரவற்ற குழந்தைகளுக்கு மாதம் ரூ.1,000 வழங்கப்படும்.

இந்த நோய்களால் பாதிக்கப்பட்ட உழவர் பாதுகாப்புத் திட்ட அட்டை நகல், குடும்ப அடையாள அட்டை நகல், நோய்கள் தொடர்பான அனைத்து ஆவண நகல்களுடன் சம்மந்தப்பட்ட தனி வட்டாட்சியரை அணுகி பயன்பெறலாம்.

**தமிழகத்தில் இன்று மழை பெய்ய வாய்ப்பு**

தமிழகம் மற்றும் புதுவையின் சில இடங்களில் புதன்கிழமை மழையோ இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் செட்டிகுளத்தில் 70 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

திருமயத்தில் 60 மி.மீ. மழையும், காரைக்குடி, அரிமளத்தில் 50 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது. இதேபோல, திருச்சுழி (40 மி.மீ.), அறந்தாங்கி (30 மி.மீ.), கடலூர், திருப்பத்தூர், ராமநாதபுரம், விருதுநகர் (20 மி.மீ.), அரியலூர், புதுக்கோட்டை, அருப்புக்கோட்டை, புதுச்சேரி, தேவலா, உசிலம்பட்டி (10 மி.மீ.) ஆகிய பகுதிகளிலும் மழை பெய்துள்ளது.

**"விவசாயிகளுக்கு ரூ. 8.5 கோடி நிவாரணத் தொகை ஒதுக்கீடு'**

காரைக்காலில் வறட்சி பாதித்த விவசாயிகளுக்கு ரூ. 8.5 கோடி நிவாரணத்துக்கென அரசு ஒதுக்கீடு செய்துள்ளது என்றார் புதுச்சேரி வேளாண் அமைச்சர் மு. சந்திரகாசு.

காரைக்கால் எல்லைக்கு அண்மையில் வந்தடைந்த காவிரி நீர் நூலாறு வழியாக மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளுக்கு பிரிக்கப்பட்டு செல்கிறது. நெடுங்காடு பகுதி அகரமாங்குடி அருகே வாஞ்சியாற்றில் உள்ள மூன்று கண் மதகை பாசனத்துக்கென செவ்வாய்க்கிழமை திறந்துவைத்தார் அமைச்சர் சந்திரகாசு. பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

நெடுங்காடு பகுதியில் திறக்கப்பட்டுள்ள தண்ணீர் மூலம் நெடுங்காடு, மேலகாசாக்குடி உள்ளிட்ட 5 கிராமப் பகுதியில் 2825 ஹெக்டேர் பாசன வசதி பெறும். காரைக்காலில் கடந்த ஆண்டு வறட்சியால் பாதிக்கப்பட்ட

விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்க அரசு ரூ. 8.5 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது. பயனாளிகளுக்கு விரைவில் நிவாரணம் வழங்கப்படும்.

காரைக்காலில் விவசாயிகளுக்கு பயனளிக்கும் வகையில் பாசனத்துக்கு கூடுதலாக 15 ஆழ்குழாய் (போர்வெல்) அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழாண்டு காரைக்கால் பகுதியில் சம்பா சாகுபடிக்கென 200 டன் விதை நெல் அடுத்த 2 நாள்களில் வரவழைக்கப்படும் என்றார் அமைச்சர்.

நிகழ்ச்சியில் கூடுதல் வேளாண் இயக்குநர் க. மதியழகன், பொதுப்பணித் துறை கண்காணிப்புப் பொறியாளர் பி. சுவாமிநாதன், செயற்பொறியாளர்கள் வி. சண்முகசுந்தரம், ஏ. ராஜசேகரன், மாணிக்கவாசகம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**சம்பா நேரடி நெல் விதைப்புப் பணி தீவிரம்**

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா நேரடி நெல் விதைப்புப் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சம்பா சாகுபடி பாசனத்துக்கா ஆக. 2-ம் தேதி மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட நீர் முக்கொம்பு கல்லணையை வந்தடைந்து, அங்கிருந்து கிளை ஆறுகளில் திறக்கப்பட்ட தண்ணீர் தற்போது திருவாரூர் மாவட்டத்திலுள்ள கால்வாய்களில் ஓடி கொண்டிருக்கிறது.

இதையடுத்து, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, நீடாமங்கலம், வலங்கைமான், நன்னிலம் உள்பட மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சாகுபடிக்கான நிலத்தை தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருவதுடன், பெரும்பாலான இடங்களில் நேரடி நெல் விதைப்புப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

மாவட்டத்தில் சம்பா சாகுபடி நடைபெறும் 1.30 லட்சம் ஹெக்டேரில் 77,000 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பும், 53,000 ஹெக்டேரில் நடவுப் பணியும்

மேற்கொள்ளப்படவுள்ளன. நடவுப் பணிக்கு 91 ஹெக்டேரில் நாற்று விடப்பட்டுள்ளது.

ஆக.13-ம் தேதி வரை 40,000 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. விதைப்பு செய்யாத நிலங்களில் புழுதி உழவு செய்து நிலத்தை சமன்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இன்னும் 10 நாள்களில் நடவு செய்யவுள்ள நிலங்களில் சேற்று உழவுப் பணி நடைபெறவுள்ளது. இதுவரை இயந்திரம் மூலம் 40,000 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு பணி செய்யப்ப ட்டுள்ளது. எஞ்சிய நிலங்கள் விதைத் தெளிப்புக்கு தயார் செய்யப்பட்டு வருகின்றன.

விதைத் தட்டுப்பாடு: வறட்சி, குளிர், மழை ஆகியவற்றை தாங்கி வளரக்கூடிய சிஆர்-1009 விதையை பயிரிடுமாறு வேளாண்துறை பரிந்துரை செய்துள்ள நிலையில் தற்போது இந்த விதை தேவையான அளவில் கிடைப்பதில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். மானிய விலையில் விவசாயிகளுக்கு தாராளமாக விதைநெல் கிடைக்க மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாணன் கூறியது: விவசாயிகளுக்கு தேவையான விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அரசு மற்றும் தனியார் நெல் விதை விற்பனை மையங்களில் பெற்றுக் கொள்ளலாம். விதை கிராமத் திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் ஒரு விவசாயிக்கு ஏக்கருக்கு 20 கிலோ விதை கொடுக்கப்படுகிறது. டிஏபி, யூரியா தேவையான அளவில் கையிருப்பில் உள்ளது என்றார் அவர்.

**சம்பா நேரடி நெல் விதைப்புப் பணி தீவிரம்**

திருவாரூர் மாவட்டத்தில் சம்பா நேரடி நெல் விதைப்புப் பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

சம்பா சாகுபடி பாசனத்துக்கா ஆக. 2-ம் தேதி மேட்டூர் அணையில் திறக்கப்பட்ட நீர் முக்கொம்பு கல்லணையை வந்தடைந்து, அங்கிருந்து கிளை ஆறுகளில் திறக்கப்பட்ட தண்ணீர் தற்போது திருவாரூர் மாவட்டத்திலுள்ள கால்வாய்களில் ஓடி கொண்டிருக்கிறது.

இதையடுத்து, திருவாரூர், திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, நீடாமங்கலம், வலங்கைமான், நன்னிலம் உள்பட மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் சாகுபடிக்கான நிலத்தை தயார் செய்யும் பணியில் ஈடுபட்டு வருவதுடன், பெரும்பாலான இடங்களில் நேரடி நெல் விதைப்புப் பணிகளை தீவிரப்படுத்தியுள்ளனர்.

மாவட்டத்தில் சம்பா சாகுபடி நடைபெறும் 1.30 லட்சம் ஹெக்டேரில் 77,000 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பும், 53,000 ஹெக்டேரில் நடவுப் பணியும் மேற்கொள்ளப்படவுள்ளன. நடவுப் பணிக்கு 91 ஹெக்டேரில் நாற்று விடப்பட்டுள்ளது.

ஆக.13-ம் தேதி வரை 40,000 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு செய்யப்பட்டுள்ளது. விதைப்பு செய்யாத நிலங்களில் புழுதி உழவு செய்து நிலத்தை சமன்படுத்தும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

இன்னும் 10 நாள்களில் நடவு செய்யவுள்ள நிலங்களில் சேற்று உழவுப் பணி நடைபெறவுள்ளது.

இதுவரை இயந்திரம் மூலம் 40,000 ஹெக்டேரில் நேரடி நெல் விதைப்பு பணி செய்யப்ப ட்டுள்ளது. எஞ்சிய நிலங்கள் விதைத் தெளிப்புக்கு தயார் செய்யப்பட்டு வருகின்றன.

விதைத் தட்டுப்பாடு: வறட்சி, குளிர், மழை ஆகியவற்றை தாங்கி வளரக்கூடிய சிஆர்-1009 விதையை பயிரிடுமாறு வேளாண்துறை பரிந்துரை செய்துள்ள நிலையில் தற்போது இந்த விதை தேவையான அளவில் கிடைப்பதில்லை என விவசாயிகள் புகார் தெரிவிக்கின்றனர். மானிய விலையில் விவசாயிகளுக்கு தாராளமாக விதைநெல் கிடைக்க மாவட்ட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து வேளாண் இணை இயக்குநர் க. மயில்வாணன் கூறியது: விவசாயிகளுக்கு தேவையான விதைகள் இருப்பு வைக்கப்பட்டுள்ளது.

அரசு மற்றும் தனியார் நெல் விதை விற்பனை மையங்களில் பெற்றுக் கொள்ளலாம். விதை கிராமத் திட்டத்தில் 50 சதவீத மானியத்தில் ஒரு விவசாயிக்கு

ஏக்கருக்கு 20 கிலோ விதை கொடுக்கப்படுகிறது. டிஏபி, யூரியா தேவையான அளவில் கையிருப்பில் உள்ளது என்றார் அவர்.

## மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 119.13 அடியாக இருந்தது

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 119.13 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 9,750 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 18,002 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. கல்லணையிலிருந்து நொடிக்கு காவிரியில் 7,001 கன அடி வீதமும், வெண்ணாற்றில் 5,510 கன அடி வீதமும், கல்லணைக் கால்வாயில் 2,017 கன அடி வீதமும், கொள்ளிடத்தில் 1,042 கன அடி வீதமும் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது.

### கறவைமாடு வளர்ப்புகலந்துரையாடல்

ஆலங்குடியில் ரிலையன்ஸ் அறக்கட்டளை மற்றும் டெஸ்போ தொண்டு நிறுவனம் சார்பில் கறவை மாடு வளர்ப்பு குறித்த தொலைபேசி வழியாக நேரடி கலந்துரையாடல் நிகழ்ச்சி செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அறக்கட்டளையின் உதவித் திட்ட மேலாளர் இரா. அன்பழகன் தலைமை வகித்தார். டெஸ்போ தொண்டு நிறுவன இயக்குநர் கணபதி முன்னிலை வகித்தார்.

நிகழ்ச்சியில் கால்நடை மருத்துவர் சந்தானம், தொலைபேசி மூலம் கால்நடை வளர்ப்போரின் சந்தேகங்களுக்கு விளக்கமளித்தார்.

இதில் திருவரங்குளம் மற்றும் கறம்பக்குடி ஒன்றியத்தைச் சேர்ந்த கால்நடை விவசாயிகள் பங்கேற்றனர். அமைப்பின் பணியாளர் ரேணுகா தேவி வரவேற்றார். தமிழ்ச்செல்வி நன்றி கூறினார்.

### தாட்கோ மூலம் கடனுதவி:விண்ணப்பிக்க அவகாசம் நீட்டிப்பு

தாட்கோ மூலம் மானியத்துடன் கூடியக் கடனுதவிப் பெற விண்ணப்பிக்கக் கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதாக கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் டி.பி. ராஜேஷ் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் திங்கள்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

தாட்கோ மூலம் மானியத்துடன் கூடியக் கடனுதவிப் பெறுவதற்கு 10.8.2013 வரை இணையதளம் மூலம் விண்ணப்பம் செய்யலாம் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதில், தற்போது விண்ணப்பிக்க அவகாசம் வரும் 20-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் பயன்பெற விரும்பும் ஆதிதிராவிடர்கள் உரிய ஆவணங்களுட்ற்றல்:ஹல்ல்ப்ண்ஞீஹற்ண்ர்ய்.ற்ஹட்க்ஞீர்.ஞீர்ம் என்ற இணையதள முகவரிக்கு சென்று விண்ணப்பத்தை ஆன்லைனில் பதிவு செய்ய வேண்டும்.

குடும்ப அட்டை அல்லது இருப்பிடச் சான்று, ஜாதி சான்று, குடும்ப ஆண்டு வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை உரிய இடத்தில் பதிவு செய்ய வேண்டும். அதேபோல, திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும், அதற்கான இடத்தில் குறிப்பிட வேண்டும். புகைப்படத்தை ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்ய வேண்டும்.

இந்தக் கால நீட்டிப்பை இந்து ஆதிதிராவிட மக்கள் பயன்படுத்திக் கொள்ளலாம் என்றார் ஆட்சியர் ராஜேஷ்.

**பயிர்க் காப்பீடு: விதிமுறைகளை மாற்ற வலியுறுத்தல்**

பயிர்க் காப்பீட்டுப் பயன்களைப் பெறுவதில் தடையாக இருக்கும் விதிமுறைகளை மாற்ற வேண்டும் என தருமபுரியில் நடைபெற்ற மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டத்தில் விவசாயிகள் வலியுறுத்தினர்.

பயிர் சாகுபடியில் விவசாயிகள் எதிர்கொள்ளும் பிரச்னைகளை கண்டறிவது குறித்து மாவட்ட அளவிலான கலந்தாய்வுக் கூட்டம் தருமபுரி மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் அலுவலகக் கூட்ட அரங்கில் நடைபெற்றது.

கலந்தாய்வுக் கூட்டத்தை மாவட்ட ஆட்சியர் கே.விவேகானந்தன் தொடங்கிவைத்துப் பேசியது:

மாநில அளவிலான உணவு உற்பத்தியில் தருமபுரி மாவட்டத்தின் பங்களிப்பை அதிகப்படுத்த வேண்டும். புதிய தொழில்நுட்பங்களை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தி அதிக உற்பத்தி செய்ய வேண்டும்.

மாவட்டத்தில் சிறுதானியப் பயிர்கள் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் உற்பத்தியை அதிகரிக்கும் வழிமுறைகளை விவசாயிகளிடம் கொண்டு சேர்க்க வேண்டும்.

விவசாயிகள் விளைபொருள்களை அப்படியே விற்பனை செய்யாமல் மதிப்பு கூட்டி விற்பனை செய்வதன் மூலம் அதிக பயன்கள் பெறலாம் என்றார் அவர்.

தனிநபர் காப்பீட்டுப் பயன்கள் பெறுவதை போல விவசாயிகள் பயிர்க் காப்பீட்டு பயன்களை பெறுவதில் தற்போது தடையாக உள்ள விதிமுறைகளை மாற்றி அமைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

பயிர் வாரியான நடைமுறை பிரச்னைகள் கலந்தோசிக்கப்பட்டு மாநில அளவிலான கலந்தாய்வுக் கூட்டத்தில் அளிக்க வேண்டிய கோரிக்கைகள் முடிவு செய்யப்பட்டன.

நிகழ்ச்சியில் வேளாண்மை இணை இயக்குநர் பொ.மனோகரன், பாப்பார்ப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையப் பேராசிரியர் மற்றும் தலைவர் நா.தமிழ்செல்வன், கூட்டுறவுச் சங்கங்களின் இணைப் பதிவாளர் ராமதாஸ், கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் பாண்டியன், விவசாயிகள் சங்கத் தலைவர் எஸ்.ஏ.சின்னசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி விவசாயிகள் நூதனப் போராட்டம்செய்யாறு**

செய்யாறில் வறட்சி நிவாரணம் வழங்கக் கோரி விவசாயிகள் நூதனப் போராட்டத்தில் திங்கள்கிழமை ஈடுபட்டனர்.

தமிழக உழவர் சங்கங்களின் கூட்டமைப்பு செய்யாறு கிளை சார்பில் செய்யாறு ஆற்றுப் பகுதியில் நடத்தப்பட்ட இப் போராட்டத்துக்கு கூட்டமைப்பின் மாவட்டத் தலைவர் வி.ஜி.புருஷோத்தமன் தலைமை தாங்கினார்.

செய்யாறு வட்டத்தில், சிட்டா அடங்களில் விவசாய சாகுபடி குறித்த நிலவரத்தை எழுதத் தவறியதாக வருவாய்த் துறையினரைக் கண்டித்தும், பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரணத்தை உடனே வழங்கக் கோரியும் நெல், கரும்பு பயிர்களின் சோகைகளை ஆற்று மணலில் போட்டு ஊதுவத்தி, கற்பூரம் ஏற்றி வைத்து அஞ்சலி செலுத்தி நூதனப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

பின்னர், கோரிக்கை மனுவினை அனக்காவூர் வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தில் அளித்தனர்.

இதில் மாவட்ட துணைத் தலைவர் திரும்பூண்டி ரகுபதி, அனக்காவூர் வட்டாரத் தலைவர் ஒ.மாரி, செயலாளர் கோவிலூர் செல்வகுமார், பொருளாளர் தவசி. ஏ.தேவராசன் உள்ளிட்ட விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயத்துக்கு சீரான மின்சாரம்: ஆட்சியர் ஆலோசனை**

திருவண்ணாமலை மாவட்டத்தில் விவசாயத்துக்கு சீரான மின்சாரம் வழங்குவது குறித்து மின்வாரிய அலுவலர்கள் மற்றும் விவசாயிகளுடன் ஆட்சியர் அ.ஞானசேகரன் செவ்வாய்க்கிழமை ஆலோசனை நடத்தினார்.

இதுகுறித்த ஆய்வுக் கூட்டம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்துக்கு தலைமை வகித்த ஆட்சியர் அ.ஞானசேகரன், மாவட்டம் முழுவதும் தாழ்வாக உள்ள மின் கம்பிகளை உயர்த்திக் கட்ட வேண்டும். கரும்பு வெட்டும் முன்பாக தாழ்வாக உள்ள மின் கம்பிகளை உயர்த்திக் கட்டும் பணியில் மின்வாரிய அலுவலர்கள் ஈடுபட வேண்டும்.

மழைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், மின்மாற்றிகளில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரிசெய்ய வேண்டும்.

சாலையோரங்களில் புதிதாக அமைக்கப்படும் மின்கம்பங்கள் 30 அடி உயரத்துக்கு குறையாமல் இருக்க வேண்டும் என்று மின்வாரிய அதிகாரிகளுக்கு ஆட்சியர் உத்தரவிட்டார்.

வந்தவாசி சன்னிதித் தெருவில் உள்ள பழுதடைந்த மின் கம்பத்தை மாற்றி அமைத்தல் மற்றும் விவசாயிகளின் இதர கோரிக்கைகள் குறித்து ஆட்சியர் ஞானசேகரன் ஆய்வு மேற்கொண்டார்.

இக் கூட்டத்தில், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) சந்திரசேகர், மின்வாரிய செயற்பொறியாளர் சிதம்பரநாதன், ஊராட்சிகளின் உதவி இயக்குநர் நரசிம்மன் மற்றும் விவசாயிகள், விவசாய சங்கப் பிரதிநிதிகள் பலர் கலந்து கொண்டனர்.

**"தக்கோலத்தில் ரூ.8 கோடிக்கு வேளாண் கடன்**

அரக்கோணத்தை அடுத்த தக்கோலம் கிளை யூனியன் பேங்க் ஆஃப் இந்தியா சார்பில் தீவிரக் கடன் வழங்கும் முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமில் சுய உதவிக் குழுவினருக்குக் கடன் வழங்கி வங்கிக் கிளை மேலாளர் முகம்மது அதர் பாஷா பேசியது:

வங்கியின் தக்கோலம் கிளை சார்பில் தக்கோலம் உள்ளிட்ட கிராமங்களுக்குச் சேவைகள் அளிக்கப்பட்டு வருகின்றன. தற்போது வேளாண்மை தொழில் பெருக்க உதவிகள் செய்ய வேண்டும் என்ற மத்திய மற்றும் மாநில அரசுகளின் உத்தரவுகளுக்கு ஏற்ப வேளாண் பணிகளுக்கான வேளாண் பொறியியல் கருவிகள் வாங்க, நிலத்தில் நீர் விநியோக குழாய்களை புதைக்கும் பணிகளுக்காக, மாட்டுப் பண்ணை, கோழிப் பண்ணை அமைக்க, நவீன முறையில் நீர் மேலாண்மையை செய்து பாசன முறையை மேம்படுத்த, தோட்டக்கலைப் பயிர்கள் விவசாயம் செய்ய என்பன உள்ளிட்ட பணிகளுக்கு கடன்களை வழங்கி வருகிறோம் வேளாண் மக்கள் மற்றும் பொதுமக்கள் கடன் பெற வங்கியை அணுகலாம் என்றார்.

விழாவில் வங்கி அதிகாரி செம்மலர் உள்ளிட்ட பலர் பங்கேற்றனர். இதே போன்று முகாம் இனி மாதா மாதம் நடைபெற உள்ளதாக மேலாளர் மேலும் தெரிவித்தார்.

**பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம்**

நீலகிரி மாவட்ட கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நீலகிரி மாவட்டத்தில் தேயிலை விவசாயத்தில் சுமார் 65 ஆயிரம் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர். இவர்களது வசதிக்காக மஞ்சூர், பிக்கட்டி, எடக்காடு, கிண்ணக்கொரை, மேற்குநாடு, மகாலிங்கா, கைகாட்டி, இத்தலார், கரும்பாலம், கட்டபெட்டு, எப்பநாடு, பிரான்டியர், பிதர்க்காடு, சாலீஸ்பரி மற்றும் பந்தலூர் ஆகிய 16 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளும், நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் தொழிற்சாலைகளும் இயங்கி வருகின்றன.

கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் மட்டும் சுமார் 22 ஆயிரம் சிறு மற்றும் குறு விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடமிருந்து தினசரி கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒருமுறை குன்னூரிலுள்ள இண்ட்கோ சர்வ் மூலமாக விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இவ்வாறு நிர்ணயம் செய்யப்படும் விலையின் அடிப்படையில் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள் மூலமாக விவசாயிகளுக்கு அவர்கள் விநியோகித்த பசுந்தேயிலைக்கேற்ற தொகை பட்டுவாடா செய்யப்படும்.

இதில், கடந்த ஜூலையில் விவசாயிகளிடமிருந்து கூட்டுறவு ஆலைகளில் கொள்முதல் செய்யப்பட்ட பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம் செய்வது தொடர்பான கூட்டம் இண்டகோ சர்வ் அலுவலகத்தில் நடத்தப்பட்டது. இண்ட்கோ சர்வ் பெருந் தலைவர் சிவகுமார் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் கூட்டுறவு தேயிலை அமைப்புகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.

இதில், கடந்த மாத பசுந்தேயிலைக்கான விலை நிர்ணயம் செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டது. அதன்படி, மாவட்ட கூட்டுறவு தொழிற்சாலைகளில் அதிகபட்சமாக கூடலூர் சாலீஸ்பரி மற்றும் பந்தலூர் தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.16 மற்றும் கூடுதல் விலையாக ரூ.1 சேர்த்து ரூ.17 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மஞ்சூர் மற்றும் கைகாட்டி கூட்டுறவு தொழிற்சாலைகளில் பசுந்தேயிலை கிலோவுக்கு ரூ.14.50 மற்றும் கூடுதலாக ரூ.1.50 சேர்த்து ரூ.16 ஆகவும், பிதர்க்காடு, பிராண்டியர் கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் கிலோவுக்கு ரூ.15.50-ம், மகாலிங்காவில் ரூ.14.50 மற்றும் கூடுதலாக 50 பைசாவும் சேர்த்து ரூ.15 ஆகவும், குந்தா, எடக்காடு, பிக்கட்டி, கிண்ணக்கொரை கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகளில் ரூ.14.50 எனவும், கரும்பாலம் மற்றும் மேற்குநாடு தொழிற்சாலைகளில் ரூ.14 ஆகவும், இத்தலார் கூட்டுறவு தொழிற்சாலையில் ரூ.13.50 எனவும், எப்பநாடு தேயிலைத் தொழிற்சாலையில் ரூ.13 எனவும் மாத விலையாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதைத்தவிர, கட்டபெட்டு கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலையில் வார விலையாக ரூ.14.50 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

**விவசாயிகள் வட்டார மாநாடு**

தமிழ்நாடு விவசாயிகள் சங்க சிவகாசி வட்டார மாநாடு, செங்கமலநாச்சியார்புரத்தில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு அந்த அமைப்பின் நிர்வாகி கே.சுந்தரமூர்த்தி தலைமை வகித்தார். கோவிந்தசாமி, சாலமுத்து ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் தி.ராமசாமி தொடக்கிவைத்து பேசினார். வேலை அறிக்கையை வட்டார செயலாளர் கூடலிங்கம் சமர்பித்தார். மாவட்டத் தலைவர் இ.ராமதாஸ், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலக்குழு உறுப்பினர் க.சமுத்திரம், மாவட்ட செயற்குழு உறுப்பினர் என்.முருகேசன், நகர செயலாளர் ஆர்.ஜீவா, திருத்தங்கல் நகர செயலாளர் சுரேஷ்குமார் ஆகியோர் பேசினர். 60 வயது பூர்த்தியடைந்த விவசாயிகளுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்பது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**போதிய வேளாண் இடுபொருள்களைவழங்கக் கோரிக்கை**

போதிய வேளாண் இடுபொருள்களை வழங்கக் கோரிக்கைபுதுச்சேரி, ஆக. 13: புதுச்சேரி பாசிக் உழவரகத்தில் போதிய வேளாண் இடுபொருள்களை வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது. இது குறித்து அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் கீதநாதன் விடுத்துள்ள அறிக்கை: புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் சம்பா பட்டத்திற்கான பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் தங்களுக்குத் தேவையான வேளாண் இடுபொருள்களை பாசிக் உழவரகத்தில் வாங்குவது வழக்கம். ஆனால் தற்போது பாசிக் உழவரகத்தில் போதிய வேளாண் இடுபொருள்கள் இருப்பில் இல்லை. இதனால் விவசாயிகள், தனியார் கடைகளில் வேளாண் இடுபொருள்களை அதிக விலைக் கொடுத்து வாங்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர். எனவே விவசாயிகளின் தேவைக்கேற்ப விதை, உரம் உள்ளிட்ட வேளாண் இடுபொருள்களை பாசிக் உழவரகத்தில் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பாசிக் உழவரகத்தில் போதிய வேளாண் இடுபொருள்களை வழங்க வேண்டும் என விவசாயிகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து அச்சங்கத்தின் பொதுச்செயலாளர் கீதநாதன் விடுத்துள்ள அறிக்கை:

புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் சம்பா பட்டத்திற்கான பணிகளில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்கள் தங்களுக்குத் தேவையான வேளாண் இடுபொருள்களை பாசிக் உழவரகத்தில் வாங்குவது வழக்கம்.

ஆனால் தற்போது பாசிக் உழவரகத்தில் போதிய வேளாண் இடுபொருள்கள் இருப்பில் இல்லை.

இதனால் விவசாயிகள், தனியார் கடைகளில் வேளாண் இடுபொருள்களை அதிக விலைக் கொடுத்து வாங்கும் நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

எனவே விவசாயிகளின் தேவைக்கேற்ப விதை, உரம் உள்ளிட்ட வேளாண் இடுபொருள்களை பாசிக் உழவரகத்தில் கிடைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மழைநீர் சேகரிப்புவிழிப்புணர்வு பேரணி**

மாமல்லபுரத்தில், பேரூராட்சி சார்பில் மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரூராட்சித் தலைவர் எம்.கோதண்டபாணி தொடங்கி வைத்த இப்பேரணியில் அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ மாணவிகள் 100-க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய பதாகைகள், அட்டைகளை ஏந்தியபடி மாமல்லபுரம் முக்கிய தெருக்கள் மற்றும் சாலைகள் வழியாக மாணவ, மாணவிகள் பேரணியாகச் சென்றனர்.

பேரணியில் துணைத்தலைவர் தேவேந்திரன் உள்ளிட்ட கவுன்சிலர்கள் பலர் கலந்து கொண்டு பொதுமக்களிடையே விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள் வழங்கினர்.

**தாட்கோ கடன்: விண்ணப்பிக்க கால அவகாசம் நீட்டிப்பு**

தாட்கோ மூலம் மானியத்துடன் கடனுதவி பெற விண்ணப்பிப்பதற்கான கால அவகாசம் ஆகஸ்ட் 20 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது என்று சென்னை மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து செவ்வாய்க்கிழமை அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

தாட்கோ மூலம் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற விண்ணப்பிக்க ஆக. 10-ஆம் தேதி வரையில் இருந்த கால அவகாசம் ஆக. 20-ஆம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தில் பயன்பெற விரும்பும் ஆதிதிராவிடர்கள் உரிய ஆவணங்களுடன்

ட்ற்றல்:ஹல்ல்ப்ண்ஸ்ரீஹற்ண்ர்ய்.ற்ஹட்க்ஸ்ரீர்.ஸ்ரீர்ம் என்ற இணையதள முகவரியில் விண்ணப்பங்களை பதிவு செய்ய வேண்டும்.

குடும்ப அட்டை அல்லது இருப்பிட சான்று, சாதிச் சான்று, குடும்ப ஆண்டு வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி ஆகியவற்றை விண்ணப்பத்தில் பதிவு செய்ய வேண்டும். திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியையும் குறிப்பிடவேண்டும்.

புகைப்படத்தையும் ஸ்கேன் செய்து பதிவேற்றம் செய்யவேண்டும் என்று ஆட்சியர் எ. சுந்தரவல்லி தெரிவித்துள்ளார்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 14.08.2013

விவசாய மலர் செய்தி

### தென்னை குருத்தழுகல் நோய்



ஒரு வகைப் பூசணத்தால் வரும் குருத்தழுகல் நோய் தமிழ் நாட்டில் உள்ள தென்னை மரங்களைத் தாக்கும் கொடிய நோய் ஆகும். இன்று தமிழக தோப்புகளில்பல பண்ணைகளில் நீர் குறைந்தாலும் காண்டாமிருக வண்டுகள் தாக்குதலாலும், குருத்தழுகல் நோயாலும் அழிந்துவருகின்றன. பல விவ சாயிகள் இந்நோய் தாக்கிய மரங்களைப் பராமரிப்பதை நிறுத்திவிடுகின்றனர்.

இளம் வயது மரங்களை இந்நோய் அதிகம் பாதிக்கிறது. முதலில் இந்தப்பூசணம் தென்னையின் குருத்துப்பகுதியைத் தாக்குகிறது. பூசணத்தின் விதைகள் போன்ற ஸ்போர்கள் குருத்துப்பகுதியில் விழுந்ததும், முளைத்து பூசண இலைகளை வளரச்செய்து குருத்தில் பரவுகிறது. இதன் இழைகளும் விதைகளும் தாக்கப்பட்ட பகுதிகளில் பல மாதங்கள் வரை உயிருடன் இருக்கும்.

இந்த விதைகளும் இழைகளும் பலவித பூச்சிகள் மூலம் தென்னை மரங்களுக்கும் பரவும். தாக்கப்பட்ட மரங்களில் முதலில் ஒருசில இளம் ஓலைகள், அதுவும் நடுப்பகுதியில் உள்ளவை மஞ்சள் நிறம் அடையும். இலைகளின் அடிமட்டைகள் எளிதில் அழுகி வலுவிழக்கும். கையால் பிடித்து இழுத்தால் பிரிந்து வந்துவிடும். பின் சுற்றியுள்ள இலைகளுக்கும் நோய் பரவிவிடும். இந்த இலைகளில் சிறு

பள்ளங்கள் கொண்ட புள்ளிகள் தோன்றும். குருத்து அழுகியதும் ஒருவித துர்வாசனை தோன்றம். ஒரு வாரத்தில் குருத்தை அழுகச் செய்துவிடும். குருத்து தோன்றும் வளர்ச்சிப்பகுதி அழிக்கப்பட்டு, மரமே வாடிவிடும்.

வெப்பம் குறைந்த காலங்களிலும் மழைக்காலங்களிலும் இந்நோய் அதிகம் தாக்குகிறது. இதனைத் தவிர்க்க எந்த மரத்திலாவது இளம் இலைகள் மஞ்சளாகத் தொடங்கியதுமே குருத்து அழுகல் நோய் வந்துள்ளதா என மரத்தில் ஏறி நின்று பார்க்க வேண்டும். அப்படி ஆரம்பித்திருந்தால் "அழுகிய பகுதியை' நீக்கிவிட்டு நீக்கிய பகுதியில் திமில் போர்ட்டோ பசையைத் தடவ வேண்டும். பாதிக்கப்பட்ட இலை களை பிரித்து எடுத்துவிட்டு, இலைகள் ஒட்டியிருந்த பகுதியிலும் போர்ட்டோ பசையைத் தடவ வேண்டும்.

மற்ற இலைகள் நன்கு நனையும்படி போர்ட்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். பண்ணையில் உள்ள இதர மரங்களுக்கும் போர்ட்டோ கலவையைத் தெளிக்க வேண்டும். போர்ட்டோ கலவை தயாரிக்க முடியாவிட்டால் காப்பர் ஆக்சி குளோரைடு (புளூ காப்பர் பைடொவான் போன்றவை) மருந்தை ஒரு லிட்டர் நீருக்கு 3 கிராம் மருந்து என்ற வீதத்தில் கலந்து தெளிக்க வேண்டும். இந்த மருந்தை ஈரமாக்கி பச்சையாகவும் போர்ட்டோ கலவைக்குப் பதிலாக குருத்திலும் இலை பிரிந்த இடத்திலும் தடவலாம். மரத்தில் ஏறி மருந்தைத் தடவ முடியாத நிலை இருந்தால் வேர் மூலம் மருந்தைச் செலுத்தி ஓரளவு கட்டுப்படுத்தலாம். நோய் ஆரம்ப நிலையில் இருக்கும் மரங்களிலும் நோய் இன்னும் பரவாமல் இருக்கும் மரங்களிலும் இதைப்பயன்படுத்தி நோய் வருமுன் காப்பதையும் செய்யலாம்.

தென்னை மரத்தின் வேர்ப்பகுதியில் மண்ணை வெட்டி, நல்ல ஆரோக்கியமான பழுப்பு நிறமுள்ள பென்சில் தடிமனுள்ள ஒரு வேரைக் கண்டுபிடிக்க வேண்டும். அந்த வேரை கீழ்ப்பகுதியில் வெட்ட வேண்டும். பின் மரத்துடன் இணைந்திருக்கும் வேரை மருந்து கலந்த நீரில் நுழைத்து வைக்க வேண்டும். இதற்கு ஒரு பாலிதீன் பையில் 25 மி.லி. தண்ணீர் எடுத்துக்கொண்டு அதில் 15 கிராம் கார்பன்டாசிம் அல்லது டிரைடிமார் 15 மி.லி. என்ற அளவு நோய் மருந்தில் ஒன்றை கரைத்துக் கொள்ள வேண்டும். பாலிதீன் பைக்குள் அந்த வேரை நுழைத்து வேரின் வெட்டிய முனை மருந்துக் கலவையின் அடிப்பகுதியை தொடும்படி வைத்து கட்டிவிட வேண்டும். பாலிதீன் பையின் வாய்வழியாக மருந்துக்கலவை கொட்டாமல் இருக்கும்படி இணைத்துக் கட்டிவிடவேண்டும். அதன்பின் அந்த மருந்துப்பையோடு வேரை மண்ணிற்குள் வைத்து மண் போட்டு மூடிவிட வேண்டும். மருந்து வைத்த 24 மணி நேரத்திற்குப் பின் மண்ணைத் தோண்டி அந்த மருந்து முழுவதும் வேரால் உறிஞ்சப்பட்டுவிட்டதா எனப் பார்க்க வேண்டும்.

உறிஞ்சப்படாமல் இருந்தால் வேறு ஒரு நல்ல வேரைத் தேர்ந்தெடுத்து மீண்டும் மருந்துக் கலவையைக் கட்ட வேண்டும். 10 அல்லது 15 நாட்கள் கழித்து மீண்டும் ஒருமுறை வேர் மூலம் மேலே கூறிய மருந்துகளில் ஒன்றை மாற்றி மற்றொன்றைக் கொடுக்க வேண் டும். குருத்தழுகல் நோய் சரிவரக் கட்டுப்படாவிட்டால், விவசாயத்துறை, தோட்டக்கலைத்துறை அல்லது வேளாண்மை பல்கலைக்கழகம் தென்னை வளர்ச்சி வாரிய நிபுணர்களைக் கலந்து, அதற்கேற்றபடி அவர்கள் ஆலோசனைகளைக் கேட்டு அதன்படி நடக்க வேண்டும்.

**எம்.ஞானசேகர்,**

**தொழில் மற்றும் விவசாய ஆலோசகர்.**

## தோட்டக்கலைப் பயிர்களில் அங்கக வேளாண்மை



தமிழக அரசு மூலம் அங்கக வேளாண்மைக்கு ஊக்குவித்திடும் முயற்சியாக "அங்கக சான்றளிப்பு' உதவிகளும் வேளாண்மை மற்றும் தோட்டக்கலைத்துறை மூலம் தொழில்நுட்ப உதவிகளும் நிறைய உள்ளன.

அங்கக சான்றளிப்பு ஒரு அவசிய தேவையாகும். இதற்கு ஆர்கானிக் ப்ராசசர் என்றும் ஆர்கானிக் ட்ரேடர் எனவும் இருவேறு விதமாக அபீடா நிறுவனத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் சான்று வழங்கப்பட்டு வருகின்றது. அங்கக வேளாண்மை மூலம் விளைபொருள் உற்பத்தி செய்பவருக்கும் அங்கக விளைபொருளை பதனிடுவோருக்கும் "ஆர்கானிக் ப்ராசசர்' என்ற சான்று தரப்படும். அங்கக விளைபொருட்கள் விற்பனை செய்வோருக்கு "ஆர்கானிக் ட்ரேடர்' என்ற சான்று தரப்படுகிறது. இதன்மூலம் அங்கக வேளாண்மை தொழிலில் ஈடுபட்டுள்ளோர் இந்த அரசு சலுகை மூலமாக அங்ககச்சான்று பெற தனிநபராகவோ, குழுவாகவோ, பெருவணிக நிறுவனங்களாகவோ பதிவு செய்துகொள்ளலாம். கால்நடை பராமரிப்பு, தேனீ வளர்ப்பு மற்றும் வனப்பொருட்கள் சேகரிப்பு செய்வோரும் இதில் பதிவு செய்து கொள்ளலாம்.

அங்கக இடுபொருட்களை வணிகம் மற்றும் ஏற்றுமதி செய்வோரும் பதிவு செய்யலாம். அங்கக சான்றளிப்பு மே 2007 முதல் மத்திய அரசின் தேசிய அங்கக வேளாண்மை செயல்திட்டத்தின்படியும் அபீடா நிறுவன வழிகாட்டுதல் மூலமும் தமிழ்நாட்டில் செய்யப்படுகிறது.

ஆண்டுப்பயிர்களுக்கும் பல்லாண்டுப் பயிர்களுக்கும் அங்கக சான்றளிப்பு தருவதற்கு கன்வெர்சன் பிரியட் எனப்படும் மாறும் காலம் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆண்டு பயிர்களுக்கு சான்று பதிவு செய்த நாளிலிருந்து இரண்டு ஆண்டுகளும் பல்லாண்டு பயிர்களுக்கு சான்று பதிவிற்கு பிறகு மூன்று ஆண்டுகளும் மாறும் காலம் என்று நிர்ணயித்து சுற்றுச்சூழல் மற்றும் முந்தின நிலப் பயன்பாட்டையும் கருத்தில் கொண்டு அனுசரிக்கப்படுகிறது. ஏற்கனவே அங்கக முறையில் தொடர்ந்து சாகுபடி செய்பவர்களாக இருந்தாலும் குறைந்தது 12 மாதங்கள் மாறும் காலமாக கடைபிடித்து அதற்குப் பிறகுதான் சான்று வழங்கப்படும். ஆனால் தொடர்ந்து அங்கக சாகுபடிசெய்தமைக்கு உரிய ஆவணங்கள் காண்பிக்கப்பட வேண்டும். அங்கக வேளாண் சாகுபடியின் வருடாந்திர பயிர் சுழற்சியில் பயறுவகை பயிர்களும் சேர்க்கப்பட வேண்டும். இதனால் மண்வளம் மேம்படுத்தப்படுகிறது. அங்கக சான்று பெற திட்டமிட்ட பகுதியில் இயற்கை உரம், தாவர பூச்சிக்கொல்லிகள் பண்ணைக்கு வெளியில் இருந்து வாங்கி உபயோகப்படுத்தும் நிலை வந்தால் அதற்கு இந்த துறையின் முன் அனுமதி பெறப்பட வேண்டும். மேலும் மண் அரிமானத் தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இப்பகுதியில் தொழிற்சாலைகள், கழிவுநீர் ஓடைகள், அதிக உரம், பூச்சி மருந்து பயன்படுத்தும் பண்ணைகளின் அருகில் அங்கக சான்றுப் பண்ணைகள் இருக்கக்கூடாது. கால்நடைகள் பண்ணையிலேயே பராமரிக்கப்பட வேண்டும். கால்நடைகளுக்கு தீவனமாக தினமும் கூடியவரையில் பண்ணையில் விளைந்தவற்றையே பயன்படுத்த வேண்டும். வெளியில் இருந்து தீவனம் பெறப்படின் மாசு இல்லாத இடங்களில் விளைந்ததாக இருத்தல் வேண்டும்.அங்கக சான்று பண்ணையில் கீழ்கண்ட 7 ஆவணங்கள் பராமரிக்கப்பட வேண்டும். அவை தினசரி பணி பதிவேடு, இடுபொருள் பதிவேடு, உற்பத்தி பதிவேடு, விற்பனை பதிவேடு, பயிர் உற்பத்தி பதிவேடு, ஆண்டு பயிர்த்திட்டம் மற்றும் பரிசோதனைகள் பற்றிய விபரங்கள் ஆய்வின்போது காண்பிக்கப்பட வேண்டும். அங்கக சான்றளிப்பிற்கு விண்ணப்ப படிவம், பண்ணையின் பொது விபர குறிப்பு, பண்ணை வரைபடம், மண் மற்றும் பாசனநீர் பரிசோதனை விபரம், ஆண்டு பயிர் திட்டம், துறையுடனான ஒப்பந்தம் ஆகியன மூன்று நகல்களில் உரிய கட்டணத்துடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பதிவு மற்றும் புதுப்பித்தல்

கட்டணங்களுக்கு வங்கி வரைவு டைரக்டர் ஆப் ஆர்கானிக் சர்ட்டிபிகேஷன், கோயம்புத்தூர் என்ற பெயருக்கு எடுக்கப்பட வேண்டும்.
தோட்டக்கலைப்பயிர்கள் குழுவாக உற்பத்தி செய்திட விவசாயிகள் திட்டமிடலாம். தனித்தனியாக விற்பனை செய்திட முயற்சி செய்யும்போது நல்ல விலை கிடைக்காத நிலை வருகிறது. இயற்கை விவசாய முறைகளை சான்று தருவதற்கு உள்ளூர் அல்லது உள்நாட்டு தரங்களுக்கு பதிவுக் கட்டணமாக சிறு, குறு விவசாயிகள் ரூ.500/-ம், பெரிய விவசாயிகள் ரூ.1000/-ம் செலுத்த வேண்டும். இதே பகுதிகளில் குழுவாக பதிவு செய்தால் ரூ.5000/- கட்டி நல்ல பலன்களை ஒருங்கிணைத்து பெறலாம். ஆண்டு புதுப்பித்தல் கட்டணமாக ரூ.25- கட்டி பயன்பெறலாம்.
தனிநபர் மற்றும் குழுவாக வாய்ப்புச் சான்றிதழ் பெற உள்நாட்டு தரத்திற்கு ரூ.1000/- மற்றும் வெளிநாட்டு தரத்திற்கு ரூ.1500/- கட்ட வேண்டும். அங்கக சான்று பெற ஆய்வு மற்றும் சான்று கட்டணம் ரூ.1000/- நாள் ஒன்றுக்கு தரப்பட வேண்டும். பயண நேர கட்டணமாக ரூ.200/-ம் உள்ளபடியான பயண செலவு கட்டணம் செலுத்த வேண்டும். வணிக நடவடிக்கை சான்று ரூ.500/- செலுத்தி பெறலாம். மண் மாதிரிகள், பாசன நீர் மாதிரிகள், இலை மாதிரிகள் மற்றும் உற்பத்தி பொருட்களின் மாதிரிகள் பரிசோதனை கட்டணம் உள்ளபடியான செலவும் கட்டப்பட வேண்டும்.
அங்கக வேளாண்மைக்கு மாறி சாகுபடி செய்தால் நல்ல விளைபொருள் பெற்று நல்ல விலைபெற இன்றே திட்டமிடுவீர். மேலும் ஆலோசனைக்கு: 98420 07125ல் தொடர்பு கொள்வீர்.

**-பீ.இளங்கோவன், கோயம்புத்தூர்-641 041.**

## சின்ன சின்ன செய்திகள்



**மரம் சார்ந்த தொழிற்சாலைகள்:** தமிழகத்தில் தடிமரம், காகிதம், தீக்குச்சி, பிளைவுட், உயிரி எரிபொருள், உயிரி எரிசக்தி, பென்சில் போன்ற பல்வேறு மரம் சார்ந்த தொழிற்சாலை கள் செயல்பட்டு வருகின்றன. இத்தொழிற்சாலைகளுக்கு தேவையான மரங்கள் பெரும்பாலும் வெளி மாநிலங்களிலிருந்தும், சில சமயம் வெளிநாடுகளிலிருந்தும் பெறப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் 130 லட்சம் எக்டர் நிலப்பரப்பில் சுமார் 20 லட்சம் எக்டருக்கு மேல் தரிசு நிலங்களாக பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன. மேலும் மானாவாரி வேளாண் நிலங்களில் உள்ள வரப்புகளில் மரம் வளர்ப்புக்கு ஏற்றதாக இருந்தாலும் வேளாண் பண்ணைக்காடுகள் குறைந்தே காணப்படுகின்றன.

தடி மரங்களுக்கு உகந்த முக்கிய மரமான தேக்கு, தோதகத்தி, வேங்கை, செம்மரம் போன்ற மரங்களை வேளாண் நிலங்களில் பண்ணைக்காடுகளாகவும் வரப்பு ஓரங்களிலும் சாகுபடி செய்யலாம்.

தமிழ்நாடு செய்தித்தாள் மற்றும் காகித நிறுவனம் ஆகியவை காகித ஆலை, அட்டை நிறுவனம் ஆகியவை காகித உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தைலம், சவுக்கு மரங்கள் காகிதம் தயாரிக்க பெருமளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மேட்டுப்பாளையம் வனக்கல்லூரியில் அதிக விளைச்சல் கொடுக்கக்கூடிய தைல மர ரகங்களான எப்.சி. ஆர்.ஐ.48, 53, 56, 106 ஆகிய ரகங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இந்த ரகங்கள் வறண்ட, தண்ணீர் தேங்கும் நிலங்களுக்கும் உகந்தவை. சவுக்கில் புதிய ரகங்களான எம்.டி.பி.1, 2 போன்ற ரகங்கள் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளன. இந்த காகிதக்கூழ் மரங்களின் மூலம் ஒரு எக்டருக்கு சுமார் ரூ.30 லட்சம் வரை வருமானம் 3 ஆண்டுகளில் பெறலாம். பெருமரம் என்ற தீக்குச்சி மரங்கள் தமிழ்நாட்டில் சாகுபடி செய்யப்படுகின்றன. தீக்குச்சி மரவளர்ப்பில் 6 முதல் 8 ஆண்டுகளில் சுமார் ரூ.5 லட்சம் வரை வருமானம் கிடைக்கும். தமிழகத்தில் குறிப்பிடத்தக்க அளவிற்கு பிளைவுட் தொழிற்சாலைகள் உள்ளன. வேளாண் பல்கலைக் கழகத்தில் பிளைவுட் தயாரிப்பதற்கு தேவையான உயர்தர மலைவேம்பு ரகங்கள் கண்டறியப்பட்டு உழவர்கள் பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டு வருகின்றன.

உயிரி எரிசக்தி சார்ந்த வேளாண் காடுகளில் சவுண்டல், சவுக்கு, தைலம், முள்ளில்லா வேலிக்கருவேல், சிசு மரங்கள் அதிக எரிதிறன் கொண்டு இருப்பதால் வளர்க்கப்படுகின்றன. (தகவல்: முனைவர் கு.இராமசாமி, துணைவேந்தர், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003)

*** இ.எம்.கலவை தயாரிப்பு:** எபெக்டிவ் மைக்ரோ ஆர்கானிசம் என்பதன் சுருக்கம்தான் இ.எம். இத்திரவத்தில் நுண்ணுயிர் உறக்கநிலையில் இருக்கும். 80 மில்லி இ.எம். திரவத்தை 10 லிட்டர் நீரில் கலந்து பயிர்களின் மேல் தெளித்துவந்தால் நல்ல பலன் கிடைக்கிறது.

தயாரிப்பு: ஒரு கிலோ வெல்லத்தை பூ---- கரைசலாக நீரில் கரைத்து, மூடியுடன் கூடிய ஒரு பிளாஸ்டிக் தொட்டியில் ஊற்றவும். இதனுடன் குளோரின் கலக்கப்படாத சுத்தமான தண்ணீர் 20 லிட்டர், இ.எம்.திரவம் ஒரு லிட்டர் ஆகியவற்றையும் சேர்த்து தொட்டியை மூடிவைக்க வேண்டும். தினமும் ஒரு முறை ஒரு விநாடி மட்டும் மூடியைத் திறந்து மூடி, உள்ளே உற்பத்தியாகும் வாயுவை வெளியேற்ற வேண்டும். ஒரு வாரத்தில் இக்கலவை, இனிய மணம், புளிப்பு சுவையுடன் வெண் நுரையுடன் காணப்படும். இந்த அறிகுறிகள் இருந்தால் மட்டுமே இ.எம்.சரியான முறையில் தயாராகியுள்ளது என்று அர்த்தம். இவ்வாறு தயாரிக்கப்பட்ட கலவையை 4 முதல் 5 வாரங்களுக்குள் பயன்படுத்த வேண்டும். இ.எம்.திரவத்தை மையமாக வைத்து 5 பொருட்களைக் கலந்து இ.எம்.5 என்கிற திரவமும் தயாரிக்கப்படுகிறது. இது வைரஸ், பாக்டீரியா, பூஞ்சண நோய்கள் மற்றும் சில வகை பூச்சிகளையும் கட்டுப்படுத்தும் திறனுடையது. ஒரு கிலோ வெல்லத்தை சம பங்கு நீரில் நன்கு கரைத்துக்கொண்டு அதில் ஒரு லிட்டர் காடி, ஒரு லிட்டர் ரம் அல்லது விஸ்கி (40 சதம் ஆல்கஹால், 6 லிட்டர் தண்ணீர், ஒரு லிட்டர் இ.எம்.ஆகியவற்றை சேர்த்து காற்று புகாத பிளாஸ்டிக் பாத்திரத்தில் ஒரு வார காலத்துக்கு மூடி வைப்பதால் இ.எம்.5 கரைசல் தயார். இதிலும் தினமும் வாயுவை வெளியேற்றிவர வேண்டும். தயாரான திரவத்தை காற்றுப்புகாத பாத்திரத்தில் சேமித்து, மூன்று மாதங்கள் வரை பயன்படுத்தலாம். ஒரு மடங்கு இ.எம்.5 திரவத்துடன் 200 மடங்கு தண்ணீரைக் கலந்து பயிர்களுக்கு தெளிக்கலாம். (50 மில்லி கரைசலுக்கு 10 லிட்டர் தண்ணீர்)- நோய்கள் கட்டுப்படும் வரை இரண்டு நாட்கள் இடைவெளியில் தொடர்ந்து தெளிக்கலாம். (தொடர்புக்கு: ஆரோவில் பகுதியில் உள்ள இகோ புரோ அமைப்பின் தொழில்நுட்ப வல்லுநர் சுமதி, 0413-262 2469)

**-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## இயற்கை விவசாயம் ஒரு வழக்கறிஞரின் அனுபவம்



திருச்செந்தூரில் வழக்கறிஞர் தொழில் செய்து வரும் ராமகிருஷ்ணன் இயற்கை விவசாயம் பற்றிகூறுகிறார். "நான் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் தாலுகா, நாசரேத் அருகில், பிடானேரி என்ற கிராமத்தில் 8 ஏக்கர் நிலம் 1993ல் கிரையம் வாங்கி விவசாயம் ஆரம்பித்தேன். ஆரம்பத்தில் சுமார் 1000 முருங்கை மரங்கள் வளர்த்தேன். அதில் ஓரளவு லாபமும் கிடைத்தது. ஆனால் நாளடைவில் பல சமயங்களில் முருங்கைக்காய் விலை வீழ்ச்சி அடைந்தது. எனவே ஒரு விதமான பயிரை பயிரிடுவது சரியல்ல என்று முடிவு செய்து, முருங்கை மரங்களுக்கு நடுவே தென்னை, மா, முந்திரி, சப்போட்டா, எலுமிச்சை, மாதுளை, சீத்தா, நெல்லி, கொய்யா, நாவல் என்று பலவிதமான மரங்களை வளர்த்துள்ளேன். மொத்தத்தில் சுமார் 30 வகையான பயன்தரும் மரங்கள் இருக்கின்றன. தென்னை மரங்களுக்கு இடையே 30 அடி இடைவெளி இருக்கிறது. அந்த இடைவெளியில் பல்வேறு மரங்களை வைத்துள்ளேன். கீரைகளும், காய்கறி செடிகளும் பயிரிட்டுள்ளேன். வீட்டிற்கு வேண்டிய காய்கறி, பழங்கள் தோட்டத்திலேயே கிடைக்கின்றன. மரங்கள் அனைத்திற்கும் சொட்டுநீர் பாசனம் செய்கிறேன்.

ஆரம்பத்தில் ரசாயன உரம், மருந்து ஆகியவைகள் பயன்படுத்தி வந்தேன். 2004ம் வருடம் குமுதம் பத்திரிகையில் நம்மாழ்வாரின் கட்டுரை ஒன்றை படித்தேன். மறுநாளே இயற்கை விவசாயத்திற்கு மாறிவிட்டேன். தற்போது சுபாஸ் பாலேக்கரின் கட்டுரைகளைப் படித்து அதன்படி ஜீரோ பட்ஜெட் இயற்கை விவசாயம் செய்து வருகிறேன். 3 நாட்டு பசுமாடுகள் இருக்கின்றன. அவற்றின் சாணத்தையும் கோமியத்தையும் கொண்டு ஜீவாமிர்தம் தயார்செய்து பயன்படுத்தி வருகிறேன். மரங்களை நோய்கள் தாக்குவதில்லை. இயற்கை விவசாயம் செய்வதால் பலவகை பறவைகள் தோட்டத்திற்கு உள்ளேயே வசிக்கின்றன. புழு, பூச்சிகளை அவைகள் உணவாகக் கொள்கின்றன. வெளியில் இருந்து வாரத்திற்கு 8 கிலோ தட்டாம் பயிர் மட்டும்தான் விலைகொடுத்து வாங்குகிறேன். நான்

சனிக்கிழமைதோறும் தோட்டத்திற்கு செல்கிறேன். உழுவதும் இல்லை. களை பறிப்பதும் இல்லை. தோட்டத்தில் ஒரே ஒரு நபர்தான் வேலை பார்க்கிறார். ஜீவாமிர்தக் கரைசலை ஊற்றுவதும், விளைபொருட்களைப் பறிப்பதும் அவரது வேலை.

ரசாயன உரம் உபயோகித்து வந்த காலத்தைவிட, மரங்கள் அதிகமாக மகசூல் கொடுக்கின்றன. தற்போது பெரு நெல்லிக்காய்களின் பாரம் தாங்காமல் கிளைகள் ஒடிந்துள்ளன. அந்த அளவு இயற்கை
விவசாயம் பலன் அளிக்கக் கூடியதாக இருக்கிறது. தொடர்புக்கு:
எஸ்.ராமகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல்., 59, மல்லிப்புரம் தெரு, திருச்செந்தூர்-628 215. போன்: 04639-245 526, 94433 86626.

## வேளாண் விதைகள் இருப்பு நிலவரம்

திருப்போரூர் : திருப்போரூர் வேளாண் அலுவலகத்தில், சம்பா பருவத்திற்கு தேவையான நெல் உள்ளிட்ட பயிர் விதைகள் போதிய அளவில் இருப்பில் உள்ளன. திருப்போரூர், வேளாண் அலுவலகத்தில் நடப்பு சம்பா பருவத்திற்கு தேவையான நெல் விதைகளான பி.பி.டி. 5204, ஏ.டி.டி. 43, ஏ.டி.டி. 45, ஆகிய நெல் ரகங்களும், உளுந்து, பச்சை பயிறு, மணிலா ஆகிய பயிறு வகை விதைகளும் போதிய அளவில் இருப்பில் உள்ளன. ஒருங்கிணைந்த சிறு தானிய திட்டத்தின் கீழ், நெல்லுக்கு மானியமாக, ஒரு கிலோவிற்கு, 5 ரூபாயும், தேசிய பாதுகாப்பு திட்டத்தில் பயிருக்கு 12 ரூபாயும், மணிலாவிற்கு 12 ரூபாயும், மானியமாக வழங்கப்படுகிறது. துவரை பயிர் செய்யும் விவசாயிகள் அதிகபட்சமாக, 7,500 ரூபாய் மானியம் பெறலாம். மானிய விதைகள் வாங்க மற்றும் வேளாண் ஆலோசனைகள் பெற, திருப்போரூர் வட்டார விவசாயிகள், வேளாண்மை மையத்தை அணுகலாம்.

## இலவச தீவன பயிற்சி முகாம்

காஞ்சிபுரம் : ஏனாத்தூர் உழவர் பயற்சி மையத்தில், "கால்நடை தீவனத்தில் அசோலாவின் பயன்பாடு' குறித்த ஒரு இலவச பயிற்சி முகாம், இன்று, நடைபெற உள்ளது என, பேராசிரியர் வெங்கடசுதாகர் ராவ் தெரிவித்துள்ளார்.

இது குறித்த அறிக்கையில், ""கால்நடைகளுக்கு, மாற்று தீவனமாக, அசோலா தாவரம் உள்ளது. இதை குறைந்த இடத்தில், விவசாயிகள் உற்பத்தி செய்யலாம்.

இதன் மூலம் கால்நடைகளுக்கு, தேவையான புரதச்சத்து கிடைக்கும். எனவே, கால்நடை தீவனத்தில் அசோலாவின் பயன்பாடு குறித்த ஒரு நாள் இலவச பயிற்சி, இன்று காலை 10:00 மணி அளவில், ஏனாத்தூர் உழவர் பயிற்சி மையத்தில் நடைபெற உள்ளது. ஆர்வமுள்ளவர்கள், இந்த முகாமில் கலந்து கொள்ளலாம், ' என, கூறப்பட்டுள்ளது.

### விவசாயிகள் குறைதீர்ப்பு

விழுப்புரம் : விழுப்புரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 16ம் தேதி விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் நடக்கிறது.விவசாயிகள் சங்க பிரதிநிதிகள், விவசாயிகள் பங்கேற்று தங்களின் கோரிக்கைகளை கலெக்டர் உட்பட வேளாண் அதிகாரிகளிடம் மனுவாக அளித்து தீர்வு காண வேண்டும் என கலெக்டர் சம்பத் தெரிவித்துள்ளார்.

### வேளாண் கூட்டுறவு சங்கத்தில் ரூ.50 லட்சத்துக்கு மஞ்சள் விற்பனை

சேலம்: சேலம், பள்ளப்பட்டி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 1,100 மூட்டைகள், 50 லட்சம் ரூபாய்க்கு விற்பனை நடந்துள்ளது. கடந்த வாரத்தை விட, குவிண்டாலுக்கு, 700 ரூபாய் விலை குறைந்துள்ளது.

சேலம், பள்ளப்பட்டியில் உள்ள சேலம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், மஞ்சள் ஏலம் நடந்தது. சேலம் மாவட்டத்தை சேர்ந்த காமளாபுரம், கருப்பூர், வெள்ளாளப்பட்டி, வாழப்பாடி, குறிச்சி மற்றும் அரூர், கிருஷ்ணாபுரம், தும்பல், பெரம்பலூர், சின்ன சேலம் மற்றும் நாமகிரிபேட்டை பகுதியை சேர்ந்த விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். சேலம், ஈரோட்டை சேர்ந்த வியாபாரிகள் மஞ்சளை வாங்கினர்.

நேற்று நடந்த ஏலத்துக்கு மொத்தம், 1,100 மூட்டை மஞ்சள் வரத்தானது. ஒரு குவிண்டால், விரளி மஞ்சள் அதிகபட்சமாக, 6,397 ரூபாய், குறைந்தபட்சமாக, 4,449 ரூபாய்க்கும், குண்டு மஞ்சள், ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 5,670 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 3,860 ரூபாய்க்கும் விற்பனையானது. பனங்காலி மஞ்சள், ஒரு குவிண்டால் அதிகபட்சமாக, 6,100 ரூபாய்க்கும், குறைந்தபட்சமாக, 8,160 ரூபாய்க்கும் விற்பனையானது.

கடந்த வாரத்தை விட குவிண்டாலுக்கு, 700 ரூபாய் விலை குறைவாகவே வணிகம்

நடந்துள்ளது. ஆனால், கடந்த வாரத்தை விட, 350 மூட்டை வரத்து அதிகமாக காணப்பட்டது. சேலம் வேளாண் விற்பனையாளர் கூட்டுறவு சங்கத்தில், நேற்று நடந்த ஏலத்தில் மொத்தம், 50 லட்சம் ரூபாய்க்கு மஞ்சள் விற்பனையானது.

## வெங்காயம் விலை உயர்வால் ஹோட்டல்களில் முட்டைக் கோஸ் பயன்பாடு அதிகரிப்பு

சேலம்: தமிழகத்தில், பெரிய, சிறிய வெங்காயம் விலை உயர்வால், சைவ, அசைவ ஹோட்டல்களில், முட்டைக்கோஸின் பயன் பாடு அதிகரித்துள்ளது.

தமிழகத்தில், வடகிழக்கு பருவமழை பொய்த்ததன் காரணமாக சின்னவெங்காயம் விலை உயர்ந்தது. பெரிய வெங்காயம் அதிக அளவில் விளையும் கர்நாடகா, மஹாராஷ்டிரா, பீஹார், குஜராத் மாநிலத்தில் தென்மேற்கு பருவமழையின் தாக்கம் அதிகரித்துள்ளதால், பெரிய வெங்காய பயிர்கள் தண்ணீரில் மூழ்கியது.விளைச்சலில் கடும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த மாதம் வரை, தமிழகத்தின் பெரிய மார்க்கெட்டுக்களான, சேலம் லீபஜார், விருதுநகர், சென்னை ஆகிய இடங்களுக்கு தினம் தோறும், 125 லாரிகளில் வந்து கொண்டு இருந்த பெரிய வெங்காயம், தற்போது, 25 லாரிகளாக குறைந்து விட்டது.

பெரிய வெங்காயம் விலை கடும் உயர்வு ஏற்பட்டுள்ளது. கடந்த மாதம் பெரிய வெங்காயம் கிலோ, 30 ரூபாய்க்கு விற்றது, தற்போது, 75 ரூபாய் முதல், 85 ரூபாய் வரை, விற்பனை செய்யப்படுகிறது. விரைவில், பெரிய வெங்காயத்தின் விலை கிலோ, 100 ரூபாயை தாண்டும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெரிய, சிறிய வெங்காயத்தின் விலை கடும் உயர்வு ஏற்பட்டுள்ளதை அடுத்து ஹோட்டல்கள், இரவு நேர தள்ளுவண்டி கடைகள், சிக்கன், காலிஃபிளவர் சில்லி விற்பனை நிலையங்களில், பெரிய வெங்காயத்துடன் முட்டை கோஸ் கலந்து விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

அசைவ ஹோட்டல்களில் ஆம்லெட்டுக்கள், கொத்து புரோட்டா, மட்டுமின்றி மட்டன், சிக்கன் ஆகியவற்றுக்கும், அதிக அளவில் முட்டைகோஸே பயன் படுத்தப்படுகிறது.

ஹோட்டல்களில் முட்டை கோஸின் பயன் பாடு அதிகரித்துள்ளதால், அதன் விலை உயர்ந்து வருகிறது.

கடந்த வாரம் வரை, முட்டை கோஸ் கிலோ, 18 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை விற்றது, தற்போது, 26 ரூபாய் முதல், 28 ரூபாய் வரை, விற்பனையாகிறது.

### 1,116 மூட்டை மஞ்சள் ரூ.37 லட்சத்துக்கு ஏலம்

ராசிபுரம்: ராசிபுரம் அடுத்த, நாமகிரிப்பேட்டை வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க வளாகத்தில், வாரந்தோறும் மஞ்சள் ஏலம் நடக்கிறது. நேற்று நடந்த ஏலத்தில், தனியார் மஞ்சள் மண்டிகள் உள்பட நாமகிரிப்பேட்டை, முள்ளுக்குறிச்சி, பேளுக்குறிச்சி, மங்களபுரம், மெட்டாலா மற்றும் அதன் சுற்று வட்டாரத்தை சேர்ந்த விவசாயிகள் மஞ்சள் மூட்டைகளை கொண்டு வந்தனர். தலா, 65 கிலோ கொண்ட, 1,116 மூட்டைகள் விற்பனைக்கு குவிந்தது. அதில், விரலி ரகம் அதிக பட்சம் ஒரு மூட்டை, 6,250க்கும், குறைந்த பட்சம், 5,811 ரூபாக்கும் ஏலம் போனது. உருண்டை ரகம் அதிக பட்சம், 5,712க்கும், குறைந்த பட்சம், 4,669 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. மேலும், பனங்காலி ரகம் அதிக பட்சம், ஒரு மூட்டை, 12 ஆயிரத்து, 800க்கும், குறைந்த பட்சம், 6,899 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்று நடந்த ஏலத்தில், 1,116 மூட்டை மஞ்சள், 37 லட்சம் ரூபாய்க்கு ஏலம் போனது.

### தாட்கோ மூலம் கடனுதவி கால அவகாசம் நீட்டிப்பு

திருச்சி: "தாட்கோ' மூலம், ஆதி திராவிடர்கள் மானியத்துடன் கூடிய கடனுதவி பெற, வரும் 20 தேதி வரை, கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தகுதி வாய்ந்தோர் உதவித் தொகை பெற, விண்ணப்பிக்கலாம் என, திருச்ச கலெக்டர் ஜெயஸ்ரீ அறிவித்தார். இதுகுறித்து, கலெக்டர் அலுவலக செய்திக்குறிப்பு: ஆதி திராவிடர்கள் பொருளாதாரத்தில் மேம்பட, பல்வேறு சலுகைகள் வழங்கப்படுகின்றன. "தாட்கோ' மூலம், ஆதி திராவிடர்கள் மானியத்துடன் கூடிய, உதவித்தொகை பெற, வரும் 10 ம் தேதிக்குள் விண்ணப்பிக்க வேண்டும் என, ஏற்கனவே அறிவிப்பு வெளியானது. பொதுமக்களின் தேவைக்காக, தற்போது விண்ணப்பிக்க, வரும் 20ம் தேதி வரை, கால அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளது. விண்ணப்பிக்க தகுதிவாய்ந்தோர், உரிய ஆவணங்களுடன் டttணீ://ச்ணீணீடூடிஞிச் tடிணிண.tச்டஞீஞிணி.ஞிணிட் என்ற, இணையதள முகவரியில், ஆன்லைன் மூலம் பதிவு செய்யவும். இதில், குடும்ப அட்டை அல்லது

இருப்பிடச் சான்று, சாதிச் சான்று, குடும்ப ஆண்டு வருமானச் சான்று ஆகியவற்றின் எண், வழங்கப்பட்ட தேதி, ஆகியவற்றை உரிய இடத்தில், பதிவு செய்ய வேண்டும். மேலும், திட்ட அறிக்கை பெறப்பட்ட தேதியை, உரிய இடத்தில் குறிப்பிட வேண்டும். புகைப்படத்தை "ஸ்கேன்' செய்து, பதிவிறக்கம் செய்ய வேண்டும். இந்த கால அவகாசத்தை, ஆதி திராவிட மக்கள் பயன்படுத்திக் கொண்டு, சலுகை பெற விரைவில், விண்ணப்பிக்க வேண்டும்.
இவ்வாறு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

## ரூ.90 கோடி விவசாய பயிர்கடன் வழங்கல் இலக்கை எட்டிய மத்திய கூட்டுறவு வங்கி

ஈரோடு: ஈரோடு மத்திய கூட்டுறவு வங்கியில், நடப்பாண்டு ஜூலை மாதம் வரை, 90 கோடி ரூபாய் விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்கி, இலக்கை பூர்த்தி செய்துள்ளதாக, மத்திய கூட்டுறவு வங்கி இணைபதிவாளர் ஹேமா தெரிவித்தார்.
ஈரோடு மூலப்பட்டறையில் மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகம் உள்ளது. கோபி, சத்தி, பெருந்துறை உள்ளிட்ட மாவட்ட பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்தி, அரசுத்துறை வங்கிகளை போல செயல்பட்டு வருகிறது.
குறிப்பாக விவசாயிகளுக்கு வட்டியில்லா பயிர்கடன், பயிர் ஈட்டுக்கடன், தங்க நகைகளின் பேரில் பயிர்கடன்களை வழங்குகிறது. தவிர, விவசாயிகள் கருவிகள் வாங்குவதற்கும் கடன் வழங்குகிறது.
கடந்தாண்டு வறட்சியால் விவசாயிகள் பாதிக்கப்பட்ட நிலையில், இழப்பீடுக்கு கணக்கு எடுக்கப்பட்ட நிலையில், நடப்பாண்டு விவசாயிகளுக்கு பயிர்கடன் வழங்கும் பணியில் ஈடுபட்டு வருகிறது. ஜூலை மாதம் முடிய, விவசாயிகளுக்கு, 90 கோடி ரூபாய் பயிர்கடன் வழங்கியுள்ளது. இதுகுறித்து மத்திய கூட்டுறவு வங்கியின் இணைப்பதிவாளர் ஹேமா கூறியதாவது:
மத்திய கூட்டுறவு வங்கியில், ஜூலை மாதம் வரையில் பயிர்கடன் வழங்கிட, 89.92 கோடி ரூபாய் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு, இலக்கை தாண்டி, 90 கோடி ரூபாய் வழங்கியுள்ளோம். நெல் பயிரிட, 91 லட்சம் ரூபாய், தென்னைக்கு, 7.59 கோடி, நிலக்கடலைக்கு, 3 கோடி, ஆலை கரும்புக்கு, 5.49 கோடி, இதர கரும்பு வகைகளுக்கு, 19.75 கோடி, வாழைக்கு, 20.19 கோடி, மரவள்ளி கிழக்கு, 6.29 கோடி, மல்பெரிக்கு, 61 லட்சம், மஞ்சள் பயிரிட, 22.83 கோடி மற்றும் இதர

பயிர்களுக்கு, 3.37 கோடி ரூபாய் என மொத்தம், 90 கோடி ரூபாய் பயிர்கடன் வழங்கப்பட்டு உள்ளது, என்றார்.

### நத்தத்தில் மழையின்றி வறட்சிபால் உற்பத்தியாளர்கள் பாதிப்பு

நத்தம்:நத்தம், சாணார்பட்டி ஒன்றியங்களில் கடந்த இரண்டு மாதமாக மழையின்றி வறட்சி நிலவுகிறது. விவசாயிகள் தங்கள் விவசாயக்கிணறுகளில் இருந்து தண்ணீர் பாய்ச்ச முடியாமல் பாதிக்கப்படுகின்றனர்.கடந்த சில மாதங் களு க்கு முன் இரண்டு நேரத்திலும் தலா 10 லிட்டர் முதல் 12 லிட்டர் வரை தந்த முதல் தர பசுக்கள் தற்போது, காலை, மாலை இருவேளைகளில் 10 லிட்டர் தருகின்றன. இதனால், கூட்டுறவு மற்றும் தனியார் பால் கொள்முதல் நிலையங்களில் பால் வரத்து குறைந்துள்ளது.

### விளைச்சல் இல்லாததால்பூக்கள் விலை அதிகரிப்பு

திண்டுக்கல்:திண்டுக்கல்லில், விளைச்சல் இல்லாததால், வாடிகையாளர்கள் விரும்பி வாங்கும் பூக்களின் விலை கிலோ ரூ. 200-க்கு விற்கப்படுகிறது.திண்டுக்கல்லில் கடந்த இரண்டு ஆண்டுகளாக எதிர்பார்த்த மழை பெய்யாததால் அனைத்து விளைநிலங்களும் தரிசு நிலங்களாக மாறியுள்ளன. மாவட்டத்தை பொறுத்தவரை காய்கறிகளுக்கு அடுத்தபடியாக பூக்களை விளைவிப்பதில் விவசாயிகள் அதிக அக்கறை செலுத்துகின்றனர். பிற மாவட்டங்களை சேர்ந்த வியாபாரிகள், திண்டுக்கல்லில் இருந்து பூக்களை மொத்தமாக வாங்கிச்செல்வதை வழக்கமாக கொண்டுள்ளனர். தற்போது, திண்டுக்கல் மாவட்டத்தில் பூ விளைச்சலுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.நிலத்தடி நீர் ஆயிரத்து 200 அடிக்கும் கீழே இறங்கிவிட்டதால் ஆழ்குழாய் கிணறுகளில் இருந்தும் தண்ணீர் பெற முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதற்கு முன் மின்சாரம் இல்லாததால், தண்ணீர் பாய்ச்ச முடியாமல் தவித்த விவசாயிகளுக்கு, இந்த ஆண்டு போதுமான மின்சாரம் இருந்தும் தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. பூ விளைச்சலை மட்டுமே நம்பியுள்ள விவசாயிகள், அதிக கட்டணம் செலுத்தி லாரிகளில் தண்ணீரை வரவழைத்து தங்கள் நிலங்களில் உள்ள பயிர்களை காப்பாற்ற வேண்டிய நிலைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்.பூக்களின் வரத்து பெருமளவில் குறைந்திருப்பதால் திண்டுக்கல் பூ மார்க்கெட்டில் கடந்த சில நாட்களாக பூக்களின் விலையில் எந்த மாற்றமும் ஏற்படாத சூழ்நிலை தொடர்ந்து நீடித்து வருகிறது. நேற்றைய விலை நிலவரம் வருமாறு:காக்கரட்டை கிலோ ரூ.

200, மல்லி ரூ. 200, கனகாம்பரம் ரூ. 250, அரளி ரூ. 50, செண்டுமல்லி ரூ. 30, சம்பங்கி ரூ. 100, முல்லை ரூ. 200, பிச்சி ரூ. 250, ரோஸ் ரூ. 60 க்கு விற்கப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 14.08.2013

### நாற்றங்கால் தயாரிக்க செயல்முறை விளக்கம்

பள்ளிபாளையம் பகுதியில் நெல் நாற்றங்கால் தயாரிப்பு பணியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு வேளாண்மை துறை அதிகாரிகள் செயல் விளக்கம் அளித்து வருகின்றனர்.

மேட்டூர் கால்வாயில் திறந்துவிடப்பட்டுள்ள பாசன நீரை கொண்டு பள்ளிபாளையம் வட்டாரத்தில் சாகுபடி பணிகளை விவசாயிகள் துவங்கியுள்ளனர். இப்பகுதியில் சுமார் 10 ஆயிரம் ஏக்கர் பரப்பில் நெல் பயிரிடப்படுகிறது. கால்வாய் பாசனத்துக்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டுள்ளதால் நெல் நாற்று விடும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

பள்ளிபாளையம் வேளாண் விரிவாக்க மையத்தில் இருப்பு வைத்திருந்த 28 டன் நெல் நிலைகள் அனைத்தும் விற்று தீர்ந்துவிட்டது. இதன் தொடர்ச்சியாக விவசாயிகளுடன் வேளாண்மை அதிகாரிகளும் இணைந்து நாற்று விடும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். விவசாயிகளின் நிலங்களுக்கு செல்லும் அதிகாரிகள், அங்கு விவசாயிகளுக்கு நாற்றாங்கால் தயாரிப்பு செயல்முறை பயிற்சி அளிக்கின்றனர்.

நாற்றுகள் வளர்வதற்கு இதமான ஈரப்பதம் தேவைப்படும். இதனால் பள்ளிபாளையம் வட்டாரத்தில் மேடை நாற்றங்கால் அமைத்து விவசாயிகள் சாகுபடி பணிகளை துவங்கியுள்ளனர். விவசாயிகளுக்கு தேவையான தொழில் நுட்ப உதவிகளை வேளாண்மை துறையினர் வழங்கி வருகின்றனர்.

### அக்கரைப்பட்டியில் 2,581 மூட்டை பருத்தி ரூ45 லட்சத்துக்கு ஏலம்

அக்கரைப்பட்டியில் நடந்த ஏலத்தில் 2,581 மூட்டை பருத்தி சுமார் ரூ45 லட்சத்துக்கு விற்பனையானது. ராசிபுரம் வேளாண் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் சார்பில் அக்கரைப்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி வளாகத்தில் பருத்தி ஏலம் நடந்தது. இதில் 40 கிலோ கொண்ட 2 ஆயிரத்து

581 பருத்தி மூட்டைகள் ஏலத்துக்கு வந்தன. அக்கரைப்பட்டி, பொரசல்பட்டி, மதியம்பட்டி, மாமுண்டி, ஆத்துமேடு, தொட்டியப்பட்டி, மல்லசமுத்திரம், வெண்ணந்துஏர், கட்டிபாளையம், ஒ. சவுதாபுரம், மின்னக்கல், மொஞ்சனுஏர் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து சுரபி ரக பருத்தியை மட்டும் விவசாயிகள் விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில் ஒரு குவிண்டால் பருத்தி ரூ5,970 முதல் ரூ6,789 வரை ஏலம் போனது. 2,581 மூட்டை பருத்தி சுமார் ரூ45 லட்சத்துக்கு ஏலம் போனது. திருச்செங்கோடு, கொங்கணாபுரம், சேலம், ஆத்தூர், ஈரோடு பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் முறையில் பருத்தியை கொள்முதல் செய்தனர்.

### ரூ.1.45 லட்சத்துக்கு கொப்பரை ஏலம்

பொள்ளாச்சி அடுத்த ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று கொப்பரை ஏலம் நடந்தது. ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், கோட்டூர், ஆழியார், ஒடையகுளம், அம்பராம்பாளையம் உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து, 44 விவசாயிகள் மொத்தம் 70 மூட்டை கொப்பரை கொண்டு வந்திருந்தனர். இதில், 39 மூட்டை முதல் தர கொப்பரையாகவும், 31 மூட்டை இரண்டாம் தர கொப்பரையாகவும், தரம் பிரிக்கப்பட்டு ஏலம் விடப்பட்டன. முதல் தர கொப்பரை ரூ.43.25 முதல் ரு.44.15 வரையிலும், இரண்டாம் தர கொப்பரை ரூ.38.20 முதல் ரூ.42.25 வரையிலும் ஏலம் போனது. விவசாயிகள் கொண்டு வந்த மூன்றரை டன் கொப்பரை ரூ.1.45 லட்சத்துக்கு ஏலம்போனது. என ஒழுங்குமுறை விற்பனை கூட கண்காணிப்பாளர் தமிழ்ச்செல்வன் தெரிவித்தார்.

### 16ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

கரூர் கலெக் டர் அலுவலக கூட்ட அரங் கில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் ஜெயந்தி தலைமையில் வரும் 16ம் தேதி காலை 10.30 மணிக்கு நடைபெறுகிறது. கரூர் மாவட்ட விவசாயிகள் அனைவரும் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். விவசாயம் மற்றும் விவ சாயம் சார்ந்த மனுக்கள் மட்டும்

விவாதத்திற்கு எடுத்துகொள்ளப்படும். இந்த தகவலை கரூர் கலெக்டர் ஜெயந்தி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

**நெல்லில் அதிக மகசூலுக்கு இயற்கை சார்ந்த பூச்சி நிர்வாகம் வேளாண் அதிகாரி விளக்கம்**

சேதுபாவாசத்திரம் வட்டாரம் வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி, வேளாண் அலுவலர் மதியரசன் ஆகியோர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்கூறியிருப்பதாவது:

திருந்திய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகள் ஒரு கிலோ விதைக்கு சூடோமோனாஸ் 10 கிராம் என்றளவில் விதை நேர்த்தி செய்ய வேண்டும். வேப்பம்புண்ணாக்கு அல்லது இழுப்பை புண்ணாக்கு ஏக்கருக்கு 100 கிலோ என்ற அளவில் இடவேண்டும். இந்த அளவை அடியுரமாக 50 கிலோ, நட்ட 15 நாட்கள் கழித்து 50 கிலோ என்ற அளவில் இடவேண்டும். ஏக்கருக்கு உயிர் உரங்களான அசோஸ்பயிரில்லம் 800 கிராம், பாஸ்போபாக்டீரியா 800 கிராம் என்ற அளவில் நடவிற்கு முன்பும், சூடோமோனாஸ் ஒரு கிலோ வீதம் நடவுசெய்த ஒரு வாரத்திற்கு பின்னரும் இடவேண்டும். டிரைகோடிரைமா ஜப்பானிக்கம் என்ற ஒட்டுண்ணியை ஏக்கருக்கு ஒரு சிசி வீதம் நடவுசெய்த 30வது மற்றும் 37வது நாளில் இடவேண்டும்.

டிரைகோடிரைமா கைலோனிஸ் என்ற ஒட்டுண்ணியை ஏக்கருக்கு 2 சிசி வீதம் நடவுசெய்த 30, 44 மற்றும் 51வது நாளில் இடவேண்டும். 5 சதவீத வேப்பங்கொட்டை கரைசலை நடவுசெய்த 40வது நாளில் தெளிக்க வேண்டும். பூச்சியின் தாக்கம் அதிகமாக இருக்கும்போது புரோபினோபாஸ் 50 இசி பூச்சிகொல்லி மருந்து 400 மில்லியை நடவுசெய்த 60வது நாள் 200 லிட்டர் தண்ணீருடன் கலந்து கைதெளிப்பான் மூலம் தெளிக்க வேண்டும். இவ்வாறு இயற்கை சார்ந்த பூச்சி நிர்வாகம் மேற்கொள்ளும்போது மகசூல் இழப்பின்றி அதிக மகசூல் பெற முடியும். இவ்வாறு அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தினத் தந்தி DAILY THANTHI வெல்க தமிழ்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 14.08.2013

### உரிக்காமலேயே கண்ணீர் வருகிறது...! பெரிய வெங்காயம் விலை கிலோ ரூ.65 ஆக உயர்ந்தது



தேனி,

தேனியில் பெரிய வெங்காயம் கிலோ ரூ.65 ஆக உயர்ந்து உள்ளது. இதனால் ஓட்டல்களில் வெங்காயத்திற்கு பதில் முட்டைக்கோஸ் பயன்படுத்தப்படுகிறது.

<u>வெங்காயம்</u>

வெங்காயத்தை உரிக்கும் போது கண்ணீர் வருவது இயல்பு. ஆனால் தற்போது வெங்காயத்தை நினைத்தாலே நடுத்தர மற்றும் ஏழை மக்களின் விழிகளில் கண்ணீர் கசிகிறது. உச்சத்தில் சென்று வியாபாரிகளை மகிழ்ச்சியை அடையச் செய்து, மக்களை கலங்கச் செய்வதும், ஒரே அடியாக வீழ்ச்சி அடைந்து விவசாயி களை வேதனை அடையச் செய்வதும் கடந்த சில ஆண்டுகளாக வெங் காயத்தின் நிலைப்பாடாக உள்ளது.

கடந்த ஆண்டு வெங்காயம் ஒரு கிலோ ரூ.100 கடந்து சென்றது. இந்த ஆண்டு தொடக்கத்தில் கிலோ ரூ.8 முதல் ரூ.10 வரை விற்பனை செய்யப்பட்டது. ஆனால் கடந்த மாதம் சின்ன வெங் காயம் கிலோ ரூ.30 ஆக உயர்ந்தது. அதன்பிறகு அதிக அளவிலான மாற்றம் இன்றி சராசரியாக ரூ.5 அதிகரிப்பதும், குறைவதுமாக உள்ளது.

<u>கிலோ ரூ.65</u>

பல்லாரி எனப்படும் பெரிய வெங்காயம் கடந்த வாரம் கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் பெரிய வெங்காயத்தின் வரத்து குறைவு காரணமாக விலை கிடு,கிடுவென உயர்ந்து உள்ளது. தேனியில் நேற்று ஒரு கிலோ பெரிய வெங்காயம் ரூ.65–க்கு விற்பனை செய்யப் பட்டது. சின்ன வெங்காயம் ரூ.40–க்கு விற்பனை செய்யப் பட்டது.

வழக்கமாக கிலோ கணக்கில் வெங்காயம் வாங்கும் பொதுமக்கள் சமையலுக்கு 100 கிராம், 150 கிராம் என பெயர் அளவிற்கு வாங்கிச் சென்றனர். சிலர் விலையை கேட்டதும் வாயடைத்துப் போய் திகைத்து நின்றனர்.

<u>வெங்காய தோசை இல்லை</u>

வெங்காயம் விலை உயர்வு காரணமாக தேனியில் உள்ள சில ஓட்டல்களில் ஆம்லெட்டு களில் வெங்காயத்திற்கு பதில் முட்டைக்கோஸ் பயன்படுத்தப்பட்டது. பெரும்பாலான ஓட்டல்களில் வெங்காய தோசை கேட்கும் வாடிக்கையாளர்களுக்கு நேற்று ‘இல்லை’ என்றே பதில் கிடைத் தது.

வெங்காயம் வரத்து மிகக்குறைவாக உள்ளதால் விலை உயர்ந்து உள்ளதாகவும், மேலும் விலை உயரும் என்றும் வியாபாரிகள் தெரிவித்தனர். இதனால் இன்னும் சில தினங்களில் பெரிய வெங்காயத்தின் விலை ‘சதம்’ அடித்தாலும் ஆச்சரியம் இல்லை...!

**பவானிசாகர் அணையில் இருந்து பாசனத்துக்காக கீழ்பவானி வாய்க்காலில் வருகிற 22–ந் தேதி தண்ணீர் திறக்க வேண்டும்**



கோபிசெட்டிபாளையம்,

பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலுக்கு பாசனத்துக்காக வருகிற 22–ந் தேதி தண்ணீர் திறக்க அரசுக்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்து உள்ளனர்.

<u>கீழ்பவானி வாய்க்கால்</u>

கீழ்பவானி வாய்க்கால் பவானிசாகர் அணையில் தொடங்கி, கடைமடை பகுதியான கரூர் மாவட்டம் மங்கலப்பட்டியில் முடிவடைகிறது. இந்த வாய்க்கால் மூலம் ஈரோடு, திருப்பூர், கரூர் ஆகிய 3 மாவட்டங்களை சேர்ந்த 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

கீழ்பவானி வாய்க்காலில் நன்செய் பாசனத்துக்கு ஆகஸ்டு மாதம் 15–ந் தேதி முதல் டிசம்பர் மாதம் 15–ந் தேதி வரையும், புன்செய் பாசனத்துக்காக ஜனவரி மாதம் 10–ந் தேதி முதல், ஏப்ரல் மாதம் 30–ந் தேதி வரையும் தண்ணீர் திறக்கப்படும். இந்த பாசன பகுதிகளில் நெல், கரும்பு, மஞ்சள், மக்காச்சோளம், நிலக்கடலை உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

<u>உயிர் தண்ணீர் திறப்பு</u>

கடந்த ஆண்டு பவானிசாகர் அணையில் போதிய அளவு தண்ணீர் இல்லாததால் கீழ்பவானி வாய்க்காலுக்கு பாசனத்துக்காக தண்ணீர் திறந்து விடப்படவில்லை. இதனால் இந்த பாசனப் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு இருந்த கரும்புகள் முதிர்ச்சி அடையும் முன்னரே வெட்டப்பட்டன. நெல் சாகுபடி முற்றிலும் பாதிக்கப்பட்டது.

இதேபோல் நிலுவைப் பயிர்களான பாக்கு, தென்னை மரங்கள் ஆகியவை தண்ணீர் இல்லாமல் காயும் நிலை ஏற்பட்டது. அதைத்தொடர்ந்து, தென்னை, பாக்கு மரங்களை காப்பாற்றுவதற்காக பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலுக்கு உயிர் தண்ணீர் திறந்து விட வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

<u>தண்ணீர் திறக்க பரிந்துரை</u>

அதன்படி கடந்த மாதம் 26–ந் தேதி முதல் கடந்த 10–ந் தேதி வரை உயிர் தண்ணீர் திறந்து விடப்பட்டது. தற்போது பவானிசாகர் அணையின் நீர்மட்டம் 84 அடியை தாண்டி விட்டதால் இந்த ஆண்டு வழக்கம்போல் கீழ்பவானி வாய்க்காலுக்கு தண்ணீர் திறந்து விடப்படும் என்று விவசாயிகள் எதிர்பார்த்து உள்ளனர்.

இதற்கிடையில் பவானிசாகர் அணையில் இருந்து கீழ்பவானி வாய்க்காலுக்கு வருகிற 22–ந் தேதி தண்ணீர் திறந்துவிட மாவட்ட நிர்வாகம் மூலம் தமிழக அரசுக்கு பொதுப்பணித்துறை அதிகாரிகள் பரிந்துரை செய்து உள்ளனர். இதனால், கீழ்பவானி வாய்க்காலின் பிரதான வாய்க்கால், மெயின் வாய்க்கால்களில் உள்ள மதகுகளை பராமரிக்கும் பணி தீவிரமாக நடந்து வருகிறது.